1990 மே 12] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

மேலும், நிலத்தடி நீர் இப்பொழுது ஆறு இடங்களிலே யிருந்து எடுக்கப்பட்டு வருகிறது. அங்கேயும் ஓரளவுக்கு நிலத்தடி நீரினுடைய நிலைமை அதிகரித்து இருக்கிற காரணத்தினால் இந்த நிலைமை பயப்படுகின்ற அளவிற்கு இல்லை. நிச்சயமாக இந்த மழையின் காரணமாக சென்னை நகர மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படாது, இப்பொழுது வழங்குகின்ற அளவிலே வழங்கப்பட்டு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) வீராணம் திட்டத்திற்காகச் செய்யப்பட்ட குழாய்களையும் வாங்கப்பட்ட தளவாடங்களையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து.

10-35 மணி

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்திலே வீராணம் திட்டம் துவங்கப்பட்டு அதற்குத் தயாரிக்கப்பட்ட சிமெண்ட் குழாய்கள், அதற்கு வாங்கப்பட்ட அதிகசக்தி வாய்ந்த மோட்டார்கள், இரும்புச் சாமான்கள், இதர தளவாடங்கள், அப்படியே பல ஆண்டுகளாக இருக்கின்றன. இந்த ஆண்டு நெய்வேலியிலே அந்தச் சிமெண்ட் குழாய்களில் ஒரு 100 குழாய்களைப் பெற்றுத் தண்ணீரை மாற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கம் இந்த சிமெண்ட் குழாய்களையும், அங்கே இருக்கிற அதிக சக்தி வாய்ந்த மோட்டார்களையும், அதற்கென வாங்கப்பட்ட இதர தளவாட சாமான்களையும் எந்த அளவிற்குப் பயன்படுத்தி இருக்கிறார்கள்? பொதுவாக இந்த சிமெண்ட் குழாய்களைத் தரைப்பாலம் அமைப்பதற்கு உபயோகிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அதோடு, தண்ணீரை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு கூட அந்த பைப்புகளை பயன்படுத்தலாம். அதிக சக்தி வாய்ந்த மோட்டார்களை விற்பதன் மூலம் கோடிக் கணக்கான ரூபாய் நம்முடைய அரசாங்கத்திற்கு வரும் என்று சொல்லப்படுகிறது. இதையெல்லாம் விரைந்து செயல்படுத்த, அவற்றை முழுமையாகப் பயன்படுத்த பொதுப்பணித் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, வீராணம் திட்டத்திற்காக மொத்தம் தயாரிக்கப்பட்ட பைப்புகள், 10,320. அதிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக புதைக்கப்பட்ட

பைப்புகளுடைய எண்ணிக்கை 4,293. மேலும் இப்போது 6,027 பைப்புகள் இருக்கின்றன. பல்வேறு நிலைகளில் இந்த பைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று, அதைச் சார்ந்திருக்கிற அதிகாரிகள் அரசாங்கத்திற்கு எழுதிய போதிலும், கடந்த 13 ஆண்டுகளாக அரசு மெத்தனமாக இருந்த காரணத்தால் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு வெளியே இருக்கிற பைப்புகளை உடனடியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று முயற்சிகளை மேற்கொண்டு அதற்காக ஒரு உயர்மட்டக் குழுவையும் நியமித்து இருக்கிறார்கள். சீப் செகரட்டரி—தலைமைச் செயலாளர் தலைமையில், பி.டபிள்யூ. டி. செகரட்டரி, மாஸ் செகரட்டரி, வீட்டு வசதி வாரிய செயலாளர், நிதித்துறை செயலாளர். குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய இயக்குநர், மெட்ரோ வாட்டர் இயக்குநர், மாநகராட்சியின் கமிஷனர், நெடுஞ்சாலைத் துறையின் தலைமைப் பொறியாளர், எம்.எம்.டி.ஏ. அதிகாரி போன்றவர்கள் அனைவரும் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் வடக்குப் பகுதியில் தரைப் பாலம் அமைப்பதற்கு அங்கேயிருக்கிற சி.ஈ., 2,682 பைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பதை எழுதி இருக்கிறார்கள். அதைப்போல கடலூர் பகுதியில் அந்த டிவிஷனில் 3,198 பைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆகவே, 5,870 பைப்புகளைத் தரைப்பாலம் அமைப்பதற்கு மட்டும் தென்னாற்காடு மாவட்டத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருத்துக்களுக்கு ஏற்ப, மீதமிருக்கிற பைப்புகளை அதற்காகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இவை எப்போதோ செய்திருக்க வேண்டிய பணிகள், இவைகள் தடைப்பட்டு விட்ட காரணத்தால், சாலையோரமாக இவைகள் இருக்க வேண்டுமென்று அப்போது இருந்தவர்கள் கருதிய காரணத்தால், இவைகள் அப்படியே இருந்து கொண்டிருக்கின்றன.

மூன்று மாதத்திற்குள் தலைமைச் செயலாளர் தலைமையில் இருக்கிற குழு அறிக்கை சமர்ப்பித்து, பிறகு இதனுடைய நஷ்டத்தை ஈடுகட்டுகிற அளவிற்கு இந்தப் பணிகள் தொடரும். நெய்வேலியில் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 30 பைப்புகளை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் ஸ்டார்ம் வாட்டர்—மழை நீரை வெளியேற்றுவதற்குப் பயன் படுத்துகிறார்கள். மேலும் அவர்கள் கோரினால் அந்த பைப்புகளைக் கொடுப்பதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.